பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 05 2025 **SATURDAY** 7 15 **AM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூரில் மெட்ரோ ரயில் சேவையின் புதிய வழித்தடத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.
2. சுத்திகரிக்கப்பாத பாமாயில், சோயாபீன் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் மீதான அடிப்படை சுங்கத் தீர்வையை மத்திய அரசு 10 சதவீதம் குறைத்துள்ளது.
3. துருக்கி விமான நிறுவனத்துடனான குத்தகை ஒப்பந்தத்தை மூன்று மாதங்களுக்குள் முடித்துக் கொள்ளுமாறு இண்டிகோ நிறுவனத்திற்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.
4. பஞ்சாப் மாநிலத்தில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இரண்டாவது கட்ட பாதுகாப்பு ஒத்திகை இன்று நடைபெறவுள்ளது.
5. பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் போபன்னா – செக் குடியரசின் **Adam Pavlasek** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது..

>>>>>>><<<<<<<

மத்தியப்பிரதேச மாநிலம், இந்தூரில் மெட்ரோ ரயில் சேவையின் புதிய வழித்தடத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

ஒருநாள் பயணமாக இன்று போபால் செல்லவுள்ள பிரதமர், அங்கிருந்து காணொலி வாயிலாக **Datia** மற்றும் **Satna** விமான நிலையங்களை திறந்து வைக்கிறார்.

**Kshipra** ஆற்றின் இரு கரைகளிலும் 860 கோடி ரூபாய் செலவில் படித்துறைகள் கட்டும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதே விழாவில் 480 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள ஆயிரத்து 271 அடல் கிராம நல்ஆளுமை மைய கட்டிடங்களுக்கான முதல் தவணை நிதியையும் பிரதமர் விடுவிக்கிறார்.

போபாலில் நடைபெறவுள்ள சமூக சீர்திருத்தவாதி லோக்மாதா தேவி 300வது ஆண்டு விழாவிலும் பிரதமர் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

>>>>>>><<<<<<<

சுத்திகரிக்கப்பாத பாமாயில், சோயாபீன் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் மீதான அடிப்படை சுங்கத் தீர்வையை மத்திய அரசு 10 சதவீதம் குறைத்துள்ளது.

உள்நாட்டில் சமையல் எண்ணெய் விலையை குறைக்கவும், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை பாதுகாக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, உடனடியாக அமலுக்கு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த எண்ணெய்கள் மீதான சுங்கத்தீர்வை 20 சதவீதமாக இருந்தது.

சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் மீதான சுங்கத் தீர்வையில் எந்தவித மாற்றமும் இல்லை.

இந்தியா, தனது தேவையில் 50 சதவீத சமையல் எண்ணெய்யை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறது.

2023-24ஆம் நிதியாண்டின் நவம்பர் முதல் அக்டோபர் மாதம் வரை ஒரு லட்சத்து 32 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான, 159 லட்சம் டன் சமையல் எண்ணெய்யை இறக்குமதி செய்தது.

மலேசியா, இந்தோனேஷியா நாடுகளிலிருந்து பாமாயிலையும், பிரேஸில், அர்ஜென்டினா நாடுகளிலிருந்து சோயாபீன் எண்ணெய்யையும் இந்தியா இறக்குமதி செய்து வருகிறது.

>>>>>>><<<<<<<<

துருக்கி விமான நிறுவனத்துடனான குத்தகை ஒப்பந்தத்தை மூன்று மாதங்களுக்குள் முடித்துக் கொள்ளுமாறு இண்டிகோ நிறுவனத்திற்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

தில்லி உட்பட இந்தியாவின் முக்கியமான விமான நிலையங்களின் சேவைகளை கையாள துருக்கியுடன் இணைக்கப்பட்ட செலிபி ஏவியேஷன் நிறுவனத்திற்கான அனுமதியை மத்திய அரசு ரத்து செய்த சில வாரங்களுக்குப் பிறகு இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

துருக்கி விமான நிறுவனத்திடமிருந்து இரண்டு போயிங் 777 விமானங்களை குத்தகைக்கு எடுத்து இயக்கும் இண்டிகோ விமான நிறுவனம், இன்றுவரை அதற்கான அனுமதியை பெற்றிருந்தது.

அந்த அனுமதியை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்குமாறு அந்நிறுவனம், சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்திடம் விண்ணப்பம் செய்திருந்தது. ஆனால், 3 மாதங்களுக்கு மேல் நீட்டிக்க அனுமதிக்க முடியாது என்று அமைச்சகம் தெரிவித்தது.

பயணிகளுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாமல் இருக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<<

பஞ்சாப் மாநிலத்தில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இரண்டாவது கட்ட பாதுகாப்பு ஒத்திகை இன்று நடைபெறவுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இத்தகைய ஒத்திகை நடத்தப்படுவதாகவும், பொதுமக்கள் யாரும் பதற்றத்திற்கு ஆளாக வேண்டாம் என்றும் மாநில உள்ளூர் காவல்படை தலைமை இயக்குநர் திரு. சஞ்சீவ் கல்லா கேட்டுக் கொண்டுள்ளார்.

பாதுகாப்பு ஒத்திகை குறித்து வெளியாகும் போலியான செய்திகளை யாரும் நம்ப வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எல்லைக்கு அப்பாலிலிருந்து தாக்குதல் நிகழ்ந்தால், மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளை பொதுமக்களுக்கு விளக்குவதற்காக இந்த ஒத்திகை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாகவும் திரு. சஞ்சீவ் கல்லா கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<<

இலக்கியத் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக சாகித்ய அகாடமி அமைப்பின் சார்பில் இரண்டு நாள் இலக்கிய மாநாடு குடியரசுத்தலைவர் மாளிகையில் உள்ள கலாச்சார மையத்தில் நடைபெற்றது.

பெண்ணிய இலக்கியங்கள், இலக்கியத்துறையில் மாற்றம், இந்திய இலக்கியங்களின் புதிய பரிமாணம் ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

இலக்கியத்திற்கு பெண்கள் ஆற்றிவரும் பங்களிப்பை இந்த மாநாட்டில் பேசியவர்கள் எடுத்துரைத்தனர்.

சமூகத்தை இலக்கியம் எவ்வாறு மாற்றியமைக்கிறது என்பது குறித்தும், இந்திய இலக்கியத் துறையில் உலகமயத்தின் தாக்கம் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

>>>>>>><<<<<<<<

இனி . . .

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு…

**(Sound Byte – Music – 12 Sec)**

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா விருது பெற்ற கேப்டன் **Gurbachan Singh Salaria** குறித்த வீரதீர சாதனைகள் . . .

**(Voice Over / Closing Music – 105 Sec)**

**>>>>>>><<<<<<<**

நியூஸிலாந்து துணைப் பிரதமரும் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சருமான திரு. **Vinston Peters** நேற்று புதுதில்லியில் வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்துப் பேசினார்.

சமீபத்தில் பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தை கண்டித்த திரு. **Vinston Peters**, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு நியூஸிலாந்து ஆதரவு அளிக்கும் என்று கூறினார்.

இந்த சந்திப்பின் போது இந்தியா – நியூஸிலாந்து இடையேயான வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு, பாரம்பரிய மருத்துவம், விளையாட்டு, கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**>>>>>>><<<<<<<**

தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், 2022-23, 2023-24ஆம் ஆண்டிற்கான அறிக்கைகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்முவிடம் நேற்று வழங்கியது.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று ஆணையத்தின் தலைவர் திரு. ஹன்ஸ்ராஜ் கங்காராம் மற்றும் உறுப்பினர் திரு. புவன் பூஷன் கமல் ஆகியோர் இந்த அறிக்கைகளை குடியரசுத் தலைவரிடம் வழங்கினர்.

**>>>>>>><<<<<<<**

பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் போபன்னா – செக் குடியரசின் **Adam Pavlasek** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-7, 7-6, 6-2 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் **Fabien Reboul – Sadio Doumbia** இணையை வென்றது.

இன்று நடைபெறவுள்ள காலிறுதிக்கு முந்தைய சுற்றில் போபன்னா –**Adam Pavlasek** இணை, பிரிட்டனின் **Patten -** ஃபின்லாந்தின் **Hari Heliovaara** இணையை எதிர்கொள்கிறது.

**>>>>>>><<<<<<<**

தாய்லாந்து ஓப்பன் சர்வதேச குத்துச்சண்டை போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் கிரணும் ஆடவர் பிரிவில் தீபக்-ம் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்று நடைபெற்ற மகளிர் 80 கிலோ எடைப்பிரிவு அரையிறுதியில் கிரண், 5-0 என்ற புள்ளிக்கணக்கில் யுக்ரைனின் **Polina Chernen**-ஐ வென்றார்.

ஆடவர் பிரிவு 75 கிலோ எடைப்பிரிவில் தீபக், 5-0 என்ற புள்ளிக்கணக்கில் தாய்லாந்தின் **Peerapat Yeasu-**வை வென்றார்.

**>>>>>>><<<<<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தகுதிச் சுற்று ஆட்டத்திற்கு மும்பை அணி தகுதி பெற்றுள்ளது.

**>>>>>>>END<<<<<<<<**